# ஒரு மரத்தில் ஒரு திருடனை இயேசு கண்டார்

## மனம்திரும்ப குழந்தைகளுக்கு உதவுக

குழந்தைகளின் வயதுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற பாடத்தை தெரிந்து கொள்க.

பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர், லூக். 19:1-10 லிருந்து சகேயுவின் கதையை **வாசிக்கவும்.** ணத்தை திருடிய மனிதன் ஒருவன் இயேசுவை சந்தித்ததும் மனமாறிய கதையை அது கூறுகிறது.

இந்தப் பாடத்தின் கடைசியில் உள்ள படத்தை குழந்தைகள் பார்த்து வரையலாம் அல்லது வண்ணம் தீட்டலாம்.

**கேட்கவும்** (ஒவ்வொரு கேள்விக்கும் பின் பதில் வருகிறது).

- சகேயுவின் தொழில் என்ன? (வச.2 ஆயக்காரன். மக்களிடம் இருந்து மிக அதிகமாக வரி வசூலிப்பது வழக்கம். அதிகமாக வசூலித்ததை அவர்கள் தங்களுக்குக்காக வைத்துக் கொண்டதால் பெரும் பணக்காரர்களானார்கள். அவர்கள் கொள்ளைக்காரர்கள்).
- சகேயு ஏன் ஒரு மரத்தின் மேல் ஏறினான்? (வச.3)
- கொள்ளைக்காரனாய் இருந்த சகேயுவை தான் மன்னித்துவிட்டதாக இயேசு எவ்வாறு காட்டினார் (வச. 5, இயேசு அவனுடைய வீட்டிற்கு விருந்து சாப்பிடச் சென்றார்)
- இயேசு தன்னிடம் பேசிய போது சகேயு எவ்வாறு உணர்ந்தான்? (வச. 6 மகிழ்ச்சி அடைந்தான்)
- இயேசு தன்னை மன்னித்துவிட்டார் என்று அறிந்த சகேயு தன் நன்றியுணர்வை எவ்வாறு காட்டினான்? (வச. 8)
- இயேசு யாரை இரட்சிக்க வந்தார்? (வச. 10)

சகேயுவின் கதையை நாடகமாக்குக: பிள்ளைகள் ஆராதனை வேளையில் இந்த நாடகத்தை நடிக்க சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்க. இதை ஆயத்தம் செய்ய பிள்ளைகளுடன் உங்கள் நேரத்தை ஒதுக்கவும். எல்லா பகுதிகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை.

- **பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் இந்த வேடங்களை ஏற்கலாம்.

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி, பேச வேண்டியதைப் பிள்ளைகளுக்கு நினைப்பூட்டுகிறவர்.

**இயேசு**

**சகேயு:** ஒரு பையில் பணத்தைக் குறிக்க கற்களோ, காகிதமோ எடுத்துக் கொள்ளவும்.

- **சிறிய பிள்ளைகள்** ஜனங்களாக.

**கதை கூறுபவர்:** கதையின் முதற் பகுதியைக் கூறவும் (லூக். 19:1-6). பின் கூற வேண்டியது, "மக்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**மக்கள்** : "இயேசு வருகிறார்!" "சகேயுவைப் பாருங்கள் மரத்தில் ஏறுகிறார்."



"அவன் வரி வசூலிக்கும் போது என் பணத்தைக் கொள்ளையடித்தான்."

"அந்த குள்ளையன் மிகவும் மோசமானவன்."

"இயேசு அவனை தண்டிப்பார் என்று நான் நினைக்கிறேன்."

**சகேயு** : ஒரு நாற்காலியில் ஏறி நிற்கவும்.

**இயேசு** : மேலே பார்த்து, "சகேயுவே! கீழே இறங்கி வா! இன்று நான் உன் வீட்டில் விருந்து சாப்பிடப் போகிறேன்."

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும் (வச. 7-10). பின் கூறுகிறார், "சகேயு கூறுவதைக் கேளுங்கள்."

**சகேயு** : நாற்காலியில் இருந்து இறங்கி, "இயேசு என் வீட்டுக்கு வருகிறார். அவர் என்னை மன்னிக்கிறார். நான் மகிழ்ச்சி அடைகிறேன்." அளவுக்கு அதிகமாக நான் வாங்கிய பணத்தைத் திரும்பக் கொடுப்பேன் (பையில் இருந்த நாணயங்களைக் கொடுப்பதாக பாவனை) நான் ஏழைகளுக்கு உதவி செய்வேன். இதோ இந்தப் பணத்தை தருகிறேன் இந்தா, வாங்கிக் கொள்.

**இயேசு** : இந்த மாதிரி மனிதனையே இரட்சிக்க வந்தேன். சகேயு காணமற் போயிருந்தான். இப்போது இரட்சிக்கப்பட்டான்.

**மக்கள்** : "சகேயு எனக்குக் கொடுத்த பணத்தைப் பாருங்கள்"

"இந்தத் திருடனை இயேசு எவ்வாறு மாற்றினார்?"

"என் பாவத்தையும் தேவன் மன்னிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

**கதை கூறுபவர்:** நாடகம் முடிந்து விட்டதை அறிவித்து, குழந்தைகளுக்கு நன்றி கூறல்.

குழந்தைகள் பெரியவர்களுக்கு இந்த நாடகத்தை நடித்துக் காட்டினால், முதல் பக்கத்தில் உள்ள கேள்விகளையும் அவர்களிடம் கேட்கவும்.

**பிள்ளைகளிடம் கேட்க வேண்டியவை:** தேவன் நமது பாவங்களை மன்னிப்பதற்காக அவருக்கு நாம் நமது நன்றி உணர்வை வேறு எவ்வழிகளில் காட்டலாம். (பிள்ளைகள் உதாரணம் தரட்டும்).

**வரைதல்:** ஒரு பணப் பையின் படம் வரைக. பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும். அடுத்த ஆராதனை வேளையின் போது அவர்கள் அவற்றை பெரியவர்களுக்குக் காட்டவும். தேவன் நமது இருதயங்களை எவ்வாறு மாற்றுகிறார் என்பதையும், பணத்தை விட அவரை விரும்புவது நமக்கு மிகவும் முக்கியமானது என்பதையும் விளக்கவும்.



**மனன வசனம்:** ஏசாயா 1:18.

**சங்கீதம் :** சங். 51:1, 7, 13 (மூன்று பேர் ஆளுக்கு ஒன்றாக ஒப்புவிக்கவும்).

**ஜெபம்:** பிதாவே! நீர் எங்களை மிகவும் நேசிப்பதால் நன்றி கூறுகிறோம். நாங்கள் வழி தப்பிய பாவிகளாக இருந்த போது நீர் எங்களை இரட்சிக்க வந்தீர். நீர் எங்களை மன்னித்து சந்தோஷத்தால் நிரப்பினீர். உமது மன்னிப்பை எண்ணி எப்போதும் எங்கள் நன்றியுணர்வைக் காட்ட விரும்புகிறோம். உமது மேல் உள்ள அன்பை பிறரை நேசிப்பதின் மூலம் வெளிப்படுத்துவோம்.

Copyright 2005 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net